**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

(2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆடித்திங்கள் 22 ம் நாள்)

**இ.ம.எண். 5/2025**

**in**

**அ.வ.எண். 99/2021**

1. கண்ணம்மாள்
2. சுமதி
3. ராகவி
4. மைனர் பிரவீன்

(மைனருக்கு கார்டியன் தாயார் 2 ம் பிரதிவாதி சுமதி மூலமாக)

5. வசந்தி
6. பிரபு
7. தினேஷ்
8. செல்வி
9. ராஜேஸ்வரி
10. சக்திவேல்
11. ரஞ்சிதா
12. கோவிந்தராஜ்
13. செல்வி
14. கண்ணம்மாள்
15. பிரபாகரன்
16. பாபு
17. சங்கீதா
18. பார்வதி
19. வீரம்மாள் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. கோவிந்தம்மாள் (இறந்துவிட்டார்)

2. பார்வதி

3. M.குமாரசாமி

4. கனரா வங்கி, காங்கயம் கிளை,
அதன் சார்பாக கிளை மேலாளர் ... எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 31.07.2025ம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.S.ரஞ்சித், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செல்வக்குமார், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

## <u>உத்தரவு</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கடந்த 26.06.2025ம் தேதி குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்ட PW1 சாட்சியை மீண்டும் அழைத்து ஆவணங்கள் குறியீடு செய்து கூடுதல் சாட்சியம் அளிக்க இம்மனுவை அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் 151ன்படி மனுதாரர்களால் இம்மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது.

### <u>1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>

i) அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் முதல் விசாரணை சாட்சியாக 12ம் மனுதாரர்/12ம் வாதி PW1 சாட்சியாக கடந்த 21.01.2025 ம் தேதி முதல்

விசாரணை செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் EX.A1 முதல் EX.A30 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 26.06.2025ம் தேதியன்று குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டு மனுதாரர்களது தரப்பு சாட்சி விசாரணைக்காக வேண்டி (Further Pws) 07.07.2025ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது,

ii) மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும் பொழுது தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு பெயர் மாற்றம் விபரங்கள் மற்றும் தாவா சொத்திலுள்ள கிணறு தோண்டப்பட்ட விபரங்கள் போன்றவற்றை குறித்து கேட்கப்பட்டுள்ள நிலையிலும் மேற்படி மனுதாரர்கள் தரப்பு சாட்சி விசாரணையின் பொழுது தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அல்லாது தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பில் 12ம் மனுதாரரின் பெயர் இருந்து வரும் ஆவணங்கள் மற்றும் மனுதாரர்களின் முன்னோர்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்று ஆவணங்கள் போன்றவற்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்படாமல் விடுபட்டு போய் விட்டது.

iii) தற்பொழுது மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள் தாப்பில் தாக்கல் செய்து குறியீடு செய்வதற்கு வா.சா.1 ஐ கூடுதல் முதல் விசாரணை சாட்சியாக முதல் விசாரணை செய்து மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யப்பட வேண்டியுள்ளதால் கடந்த 26.06.2025ம் தேதி முடிக்கப்பட்ட வா.சா.1 சாட்சி விசாரணையை மீண்டும் மறுதிறப்பு செய்து மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 ஐ மீண்டும் கூடுதல் சாட்சி விசாரணை செய்ய அனுமதியளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே கடந்த 26.06.2025ம் தேதி குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்ட வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து

ஆவணங்கள் குறியீடு செய்து கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2) 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம் :–**

i) மனுதாரர்கள் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) மனுதாரர்கள் தரப்பில் கடந்த 21.01.2025ம் தேதி PW–1 சாட்சி முதல் விசாரணை செய்யப்பட்டு கடந்த 26.06.2025ம் தேதி குறுக்கு விசாரனை செய்து முடிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் மேற்படி ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும் போதோ அல்லது முதல் விசாரணையின் போதோ என்ன காரணத்தால் தாக்கல் செய்ய இயலவில்லை என்று எந்தவித காரணமும் குறிப்பிடவில்லை. மனுதாரர்கள் இம்மனுவில் மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு பெயர் மாற்றம் மற்றும் தாவா சொத்தில் உள்ள கிணறு போன்றவை குறித்து கேட்கப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு மற்றும் மனுதாரர்களின் முன்னோர்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்று போன்றவற்றை தற்போது தாக்கல் செய்து குறியீடு செய்ய கடந்த 26.06.2025ம் தேதி குறுக்கு விசாரனை செய்து முடிக்கப்பட்ட PW–1 சாட்சி விசாரனையை மீண்டும் ரீகால் செய்ய அனுமதியளிக்குமாறு கோரியுள்ளார். மனுதாரர்கள் இம்மனுவில் கோரும் பரிகாரமானது காலம் கடந்து மனுதாரரின்

PW–1 சாட்சி குறுக்கு விசாரணையில் இந்த எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள சாதகங்களை அடைக்கும் நோக்கில் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டும் என்பதே 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பில் 12ம் மனுதாரரின் பெயர் இருந்து வரும் ஆவணங்கள் மற்றும் மனுதாரர்களின் முன்னோர்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்று ஆவணங்கள் போன்றவற்றை வா.சா.1ஐ கூடுதல் முதல் விசாரணை சாட்சியாக முதல் விசாரணை செய்து மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யப்பட வேண்டியுள்ளதால் கடந்த 26.06.2025ம் தேதி முடிக்கப்பட்ட வா.சா.1 சாட்சி விசாரணையை மீண்டும் மறுதிறப்பு செய்து மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1ஐ மீண்டும் கூடுதல் சாட்சி விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவில் மேற்படி ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும் போதோ அல்லது முதல் விசாரணையின் போதோ என்ன காரணத்தால் தாக்கல் செய்ய இயலவில்லை என்று எந்தவித

காரணமும் குறிப்பிடவில்லை என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்தை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள பாகபாத்திய விடுதலை ஆவணமானது ரீ.ச.908/2, பழைய க.ச.974 பூமியை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 28.06.2023 அன்று 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 04.10.2023 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கடந்த 21.06.2024 அன்று 3, 4 பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்ட அடமான ஆவணம் ரத்து செய்யப்பட்டுவிட்டதால் 4ம் பிரதிவாதி அவசியமற்ற தரப்பினர் என்பதால் 4ம் பிரதிவாதியை நீக்கம் செய்யக்கோரி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி அசல் வழக்கில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார். பின்னிட்டு கடந்த 21.01.2025 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.30 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 26.06.2025 அன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, மேற்கொண்டு வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக அசல் வழக்கானது ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 07.07.2025 அன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து ஆவணங்கள் குறியீடு செய்து கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதி கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும் போதோ அல்லது முதல் விசாரணையின் போதோ

என்ன காரணத்தால் தாக்கல் செய்ய இயலவில்லை என்று எந்தவித காரணமும் குறிப்பிடவில்லை என்றும் மனுதாரர்கள் இம்மனுவில் கோரும் பரிகாரமானது காலம் கடந்து மனுதாரரின் PW–1 சாட்சி குறுக்கு விசாரணையில் இந்த எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள சாதகங்களை அடைக்கும் நோக்கில் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி மனுதாரர்களால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மனுதாரர்கள் இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் வா.சா.1 தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை குறித்து வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரருக்கு போதிய வாய்ப்பும் வசதியும் உள்ளது என்பதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய வா.சா.1 க்கு போதிய வாய்ப்புகள் வழங்கியும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.30 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட நிலையில் தற்போது மேலும் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் 2, 3 எதிர்மனுதார்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்கள்/வாதிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகளுக்கு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) செலவு தொகையாக வரும் 12.08.2025ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 12.08.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.08.07 20:33:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.08.07 20:33:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.